**சார்பு நீதிமன்றம், உசிலம்பட்டி**

# OS. No. 136/2022

**23.03.2026**

## D.W.1- ராஜாராம்

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

எனது அப்பா பெயர் பெரியக்கருப்பத்தேவர் என்றால் சரிதான். எனது தாயார் பெயர் காத்தம்மள் என்றால் சரிதான். மேற்படியார்களின் மூத்த மகன் நமச்சிவாயம் என்றால் சரிதான். அவர் இறந்துவிட்டார் என்றால் சரிதான். நமச்சிவாயத்தின் மனைவி ராசம்மாள் இறந்துவிட்டார் என்றால் சரிதான். மேற்படியாரின் பிள்ளைகள் தான் 1ம் பிரதிவாதி, 2ம் பிரதிவாதியின் மனைவி பாண்டியம்மாள் மற்றும் இறந்து போன பிரபுராம் என்றால் சரிதான். நான் பெரியகருப்பத்தேவர் மற்றும் காத்தம்மாளின் 2வது மகன் என்றால் சரிதான். 5, 6ம் பிரதிவாதிகள் எனது உடன்பிறந்த சகோதரிகள் என்றால் சரிதான். 1ம் வாதியின் மனைவி பெயர் தான் ஆரஞ்சு (எ) சகுந்தலா என்றால் சரிதான். 2ம் வாதியான ஹரிதாஸ் மற்றும் 3ம் வாதி ஆகியோர் சகுந்தலாவின் வாரிசுகள் என்றால் சரிதான். எனது உடன்பிறந்த கடைசி சகோதரர் ரகுபதி திருமணம் ஆகாமல் இறந்துவிட்டார் என்றால் சரிதான். தாவா 1 முதல் 3 அயிட்ட சொத்துக்கள் எனது தாயாருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். தாவா 9வது அயிட்ட சொத்தில் 2 ஏக்கர் 46 சென்டில் மேல்புறம் 82 சென்டை பொறுத்து எனது தகப்பனார் கடந்த 17.03.1954-ல் பெரியகருப்பத்தேவர் மகன் சந்திரத்தேவர் மற்றும் அவரது வாரிசுகளிடமிருந்து கிரையம் வாங்கினார் என்றால் சரிதான். தாவா 9-வது அயிட்ட சொத்தில் ஒரு பகுதியான சர்வே எண்.43/3-ல் ஏக்கர் 2 சென்டு 46ல் கீழ்புறத்தில் வடபுறம் சென்டு 62யை பொறுத்து எனது தகப்பனார் கடந்த 16.03.1988-ல் கருப்பத்தேவர் மகன் அழகு என்பவரிடமிருந்து கிரையம் பெற்றுள்ளார் என்றால் சந்தனத்தேவர் மகன் அழகு என்பவரிடம் கிரையம் பெற்றார். தாவா 9வது அயிட்ட சொத்தின் ஒரு

பகுதியான சர்வே எண்.43/3-ல் கீழ்புறத்தில் தென்புறம் ஏக்கர் 1 சென்டு 23-யை பொறுத்து கடந்த 25.08.1988-ல் நாராயணநாடார் மக்களிடமிருந்து எனது அப்பா கிரையம் பெற்றார் என்றால் சரிதான். தாவா 9வது அயிட்ட சொத்தை பொறுத்து எனது தகப்பனார் பெரியகருப்பத்தேவர், நான், இறந்துபோன ரகுபதி, நமச்சிவாய மனைவி தமிழ்செல்வி, நமச்சிவாய மகள் பாண்டியம்மாள், எனது தாயார் காத்தம்மாள், எனது சகோதரி அழகம்மாள், எனது சகோதரி சகுந்தலா, எனது சகோதரி ஒச்சம்மாள் ஆகியோர்கள் சின்னக்காளை, பாப்பாத்தியம்மாள், ராஜேந்திரன், ராஜேஸ்கண்ணன் ஆகியோர்கள் மீது திருமங்கலம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அ.வ.514/1992 வழக்கு தாக்கல் செய்து மேற்படி வழக்கு உசிலம்பட்டி, மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்திற்கு மாற்றம் செய்யப்பட்ட அ.வ.349/1995 வழக்கின் வாதிகளுக்கு தனித்து பாத்தியப்பட்டது என விளம்புகை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்து வழக்கு எங்களுக்கு சாதகமாக தீர்ப்பாகியுள்ளது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த தீர்ப்பு நகலில் ராஜாராமிற்கு மட்டும் தான் பாத்தியம் என தீர்ப்பு பகரப்படவில்லை என்றால் சரியல்ல. மொத்தம் 17 அயிட்ட சொத்திற்கு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். தாவா 9வது அயிட்ட சொத்து ரோட்டிற்கு அருகில் உள்ள மதிப்புள்ள சொத்து என்றால் சரிதான். தாவா 9வது அயிட்ட சொத்தை பொறுத்து எனது மனைவி அம்பிகாவிற்கு தானசெட்டில்மென்ட் பத்திரம் எழுதிக்கொடுத்தேன் என்றால் சரிதான். பின்னர் எனது மனைவி மற்றும் பிள்ளைகள் தாவா 9வது அயிட்ட சொத்தை பொறுத்து எனக்கு தானசெட்டில்மென்ட் எழுதி வைத்தார்கள் என்றால் சரிதான். நான் எனது மனைவிக்கு தாவா 9வது அயிட்ட சொத்தை பொறுத்து தானம் கொடுக்க எனக்கு உரிமையில்லை என்றால் சரியல்ல. தாவா 9வது அயிட்ட பொறுத்தும், இதர சொத்துக்களை பொறுத்தும் வழக்கின் 1வது வாதியின் மனைவியோ, அவரது சகோதரிகளோ எந்த காலத்திலும் வாக்கரலாக தானம் எழுதிக்கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. நிருபண வாக்குமூலத்தில் நான் தான் விவரம் கூறினேன். கடந்த 09.07.1987ல் பி.வா.சா.ஆ.1 ஆவணத்தை எனது தகப்பனாரும், நானும், எனது மனைவியும் 12வது அயிட்ட சொத்தில் 1 ஏக்கர்

15 சென்டும், தாவா 13 முதல் 15 வரையிலான சொத்துக்களை பொறுத்து 7ம் பிரதிவாதி பேச்சியம்மாளுக்கு கிரையம் கொடுத்தோம் என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தில் தாவா 10வது அயிட்ட சொத்தில் 30 சென்டும், 11, 12வது அயிட்ட சொத்துக்களை பொறுத்து நாங்கள் கிரையம் கொடுத்தோம் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.1ல் உள்ள சொத்து விவரம் தவறானது என்றால் சரியல். தாவா சொத்துக்களை எனக்கோ, எனது தகப்பனாருக்கோ வாதியின் பங்கை சேர்த்து எழுதிக்கொடுக்க உரிமையில்லை என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.2 ஆவணத்தை நானும், எனது சகோதரர்கள் ராஜாராம், ரகுபதி ஆகியோர்கள் 12வது அயிட்ட சொத்தில் 30 சென்டும், 10, 11 அயிட்ட சொத்துக்களை பொறுத்து 8வது பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்தோம் என்றால் சரிதான். மேற்படி கிரையப்பத்திரத்தில் 12வது அயிட்ட சொத்தில் 1 ஏக்கர் 15 சென்டும், 14வது அயிட்ட சொத்தில் 17 சென்டும், 13வது சொத்தில் 9 சென்டும் காணப்படுகிறது என்றால் தெரியாது. பி.வா.சா.ஆ.2 ஆவணத்தின் சொத்து விவரம் தவறானது என்றால் சரியல்ல. 8வது பிரதிவாதிக்கு வாதியின் பங்கை சேர்த்து கிரையம் கொடுக்க எங்களுக்கு உரிமையில்லை என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.6ல் தவறுதலாக 10, 11வது அயிட்ட சொத்துக்களின் கணினி பட்டா வழங்கியதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. தாவா சொத்தை நாங்களும், பிரதிவாதிகளும் கூட்டாக அனுபவம் செய்து வருகிறோம் என்றால் சரியல்ல. தாவா 9வது அயிட்ட சொத்தை பொறுத்து சென்டு 25யை பொறுத்து 12ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்தேன் என்றால் சரிதான். நானும், எனது தகப்பனாரும், எனது சகோதரர்களும், தனியாக நான் கிரையம் கொடுத்த சொத்துக்களும் காலியிடமாக உள்ளது என்றால் சரிதான். நாங்கள் 7, 8 பிரதிவாதிகளுக்கு கிரையம் கொடுத்த விவரம் வழக்கு தாக்கல் செய்த பிறகு தான் தெரியவந்தது என்றால் சரியல்ல. வாதி கோரிய பரிகாரம் கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல. வாக்கரால் தானம் எதுவும் வாதி

கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்துக்கள் கூட்டு அனுபவத்தில் உள்ளது என்றால் சரியல்ல.

ம.வி.இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்குப் படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

P S RUSKIN RAJ

Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2026.03.23 18:27:05 +0530

சார்பு நீதிபதி,
உசிலம்பட்டி.